# EASTERN UNIVERSITY, SRI LANKA

# FACULTY OF ARTS AND CULTURE

## First Examination in Arts and Culture 2004/2005 (External)

## COC 101 Principles of Management (Proper and Repeat)

ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக  நேரம் : 3 மணித்தியாலயம்

---

01) மக்கள் நிறுவனங்களையும் அதனை முகாமை செய்யும் முறையைப் பற்றியும் கற்க ஆரம்பித்ததிலிருந்து முகாமைத்துவம் பற்றிய கோட்பாடுகள் உருவாகின.

a. முகாமைத்துவம் தொடர்பான பழமை வாய்ந்த கோட்பாடுகள் எவை? அவற்றில் ஒன்றினை விளக்குக.

(07 புள்ளிகள்)

b. எல்ரன் மயோவினால் (Elton Mayo) முன்வைக்கப்பட்ட மனித உறவு அணுகுமுறை தொடர்பான கருத்துக்களை சுருக்கமாக கூறுக.

(07 புள்ளிகள்)

c. ஒரு சிறந்த முகாமையாளறிற்கு தேவையான திறன்கள் பண்புகள் யாவை?

(06 புள்ளிகள்)

02) முகாமைச் செயற்பாடுகளில் தீர்மானம் எடுத்தல் ஒரு முக்கிமான செயற்பாடாகும். பொதுவாக, தீர்மானம் மேற்கொள்வதில் ஆற்றலுடையவர்கள் சிறந்த முகாமையாளர்களாக விளங்குகின்றனர்

a. தீர்மானம் எடுத்தலின் படிமுறைகளை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

b. வினைத்திறனான தீர்மானம் எடுத்தலில் காணப்படும் தடைகள் யாவை

(07 புள்ளிகள்)

c. கட்டுபாடில்லா கலந்துரையாடல் அல்லது மூளையை உருட்டுதல் (Brain Storming) என்பதனால் நீர் கருதுவது யாது? விளக்குக

(06 புள்ளிகள்)

03) a. ஒரு நிறுவனத்தில் தொடர்பாடல் மேற்கொள்ளப்படுவதற்கான முக்கியமாக காரணங்கள் யாவை?

(07 புள்ளிகள்)

b. தொடர்பாடல் செய்முறையை பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக

(07 புள்ளிகள்)

c. தொடர்பாடலின் தகவல் தொழிநுட்பத்தின் செல்வாக்கினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

04) ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கோ அல்லது தோல்விக்கோ காரணமாக அமைவது தலைமைத்துவமாகும்.

a. தலைமைத்துவம் என்றால் என்ன? சிறந்த தலைவருக்குரிய பண்புகள் யாவை?

(07 புள்ளிகள்)

b. ஒரு தலைவருக்கும் முகாமையாளருக்குமிடையிலான வேறுபாடுகள் யாவை?

(07 புள்ளிகள்)

c. தலைமைத்துவம் தொடர்பான நடத்தைக் கோட்பாட்டை பொருத்தமான ஒரு உதாரணத்துடன் விளக்குக?

(06 புள்ளிகள்)

05) முகாமைத்துவ செய்முறைகளின் பிரதான ஒன்றாக கட்டுப்படுத்தல் காணப்படுகின்றது.

a. கட்டுப்படுத்தல் செயல் முறையின் பிரதான படிமுறைகளை சுருக்கமாக விளக்குக?

(07 புள்ளிகள்)

b. நிறுவனம் ஒன்றிற்கு கட்டுப்பாட்டுச் செய்முறை எவ்வாறு முக்கியமாக காணப்படுகின்றது.

(07 புள்ளிகள்)

c. நிறுவனம் ஒன்றில் கடைப்பிடிக்கப்படும் கட்டுப்படுத்தல் முறைமைகள் யாவை?

(06 புள்ளிகள்)

06) ஊக்கப்படுத்துதல் இன்று மிகவும் பிரபல்யமடைந்து வருகின்ற ஒரு முகாமைத்துவச் செயற்பாடாகும்.

a. நிறுவனங்களிட்கு ஊக்கப்படுத்தல் ஏன் அவசியமானது?

(07 புள்ளிகள்)

b. Maslowவின் ஊக்கப்படுத்தல் கோட்பாட்டை விளக்குக?

(07 புள்ளிகள்)

c. Herzberga யினால் முன்வைக்கப்பட்ட இருகாரணிக் கோட்பாடு யாது? இது எதனை வலியுறுத்துகின்றது?

(06 புள்ளிகள்)

07) சமகாலத்தில் முகாமைத்துவம் எல்லோராலும் விரும்பிக் கற்கப்படுகின்ற ஒரு துறையாகக் காணப்படுகின்றது.

a. இன்று முகாமைத்துவமானது எவ்வாறு சமகாலத்திற்கு பயனுடையதாக காணப்படுகின்றது?

(07 புள்ளிகள்)

b. முகாமைத்துவ தொழிற்பாடுகளை சுருக்கமாக விபரிக்க?

(07 புள்ளிகள்)

c. நேர முகாமைத்துவம் என்றால் என்ன? இதனை எவ்வாறு வினைத்திறனாக நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன?

(06 புள்ளிகள்)

08) சிறந்த முகாமைத்துவம் திட்டமிடலின் ஓர் விளைவாகும்.

a. நிறுவனம் ஒன்றிற்கு சிறந்த திட்டமிடலின் அவசியம் யாது?

(07 புள்ளிகள்)

b. திட்டமிடல் படிமுறைகளை சுருக்கமாக விபரிக்க

(07 புள்ளிகள்)

c. நீர் ஓர் முகாமையாளராக இருந்தால், சிக்கலான விடயங்கள் சார்பாக எவ்வாறு திட்டமிடலை மேற்கொள்வீர்?

(06 புள்ளிகள்)